# வலயக்கல்வி அலுவலகம் - யாழ்ப்பாணம்

## இரண்டாம் தவணைப்பரீட்சை - 2017

| தரம் - 7 | குடியியற்கல்வி | நேரம் :- 2 மணித்தியாலம் |
| --- | --- | --- |

### பகுதி I

❖ பொருத்தமான விடையின் கீழ்கோடிடுக.

1. குடும்ப உறுப்பினர்கள் நல்ல செயல்களைச் செய்ய ஒத்தாசை புரிவது
1) சமூகம் 2) குடும்பம் 3) பெற்றோர் 4) ஆசிரியர்

2. பிள்ளைகளுக்கு பெற்றோரினதும், ஏனைய உறுப்பினர்களினதும் அன்பும், அரவணைப்பும் கிடைப்பது,
1) தனிக் குடும்பம் 2) கூட்டுக் குடும்பம் 3) சமூகம் 4) பாடசாலை

3. மனிதனிடத்தில் காணப்படும் பலவீனமான குணங்களில் ஒன்றாக அமைவது
1) நேர்மை 2) பொறுமை 3) முன்கோபம் 4) சாந்தம்

4. எமது எதிர்கால அந்தஸ்தை தீர்மானிக்கும் பிரதான சாதனம்
1) கல்வி 2) பணம் 3) குடும்பம் 4) சமூகம்

5. அழகியல் செயற்பாட்டினால் மனதில் தோன்றுவது
1) திறன் 2) பயம் 3) இரசனை 4) செலவு

6. கொள்கலன்களில் அடைக்கப்பட்ட கொள்வனவு செய்யும் போது கவனிக்க வேண்டியது
1) பொருளின் சுவை 2) காலாவதியாகும் திகதி
3) பொதியின் வடிவம் 4) பொதியின் அலங்காரம்

7. நாட்டில் சிறந்த பிரசையாக ஒருவர் திகழ வேண்டுமாயின் பேணப்பட வேண்டிய ஆளிடை தொடர்பானது
1) நிறுவனங்களுடான ஆளிடைத் தொடர்பு
2) அயலவர்களுடனான ஆளிடைத் தொடர்பு
3) பெற்றோர் - பிள்ளைகளுக்கிடையான ஆளிடைத் தொடர்பு
4) ஆசிரியர் மாணவர்களிட்கிடையான ஆளிடைத் தொடர்பு

8. "சமூக மக்களின் நலன்புரி விடயங்களை நடைமுறைப்படுத்தல்" தொடர்பில் செயற்படும் சமூக நிறுவனங்களில் ஒன்று
1) சமய அமைப்புக்கள் 2) கிராம அபிவிருத்திச்சங்கம்
3) விளையாட்டுக் கழகங்கள் 4) மகளிர் கழகங்கள்

9. எமக்கு அன்றாடம் தேவைப்படும் முக்கிய தகவல்களில் ஒன்று அல்லாதது
1) வானிலை எதிர்வு கூறல் 2) சந்தை விலைகள்
3) அரச அறிவித்தல்கள் 4) நண்பர்களின் நட்பு

10. அரசியல் உரிமைகளில் ஒன்று
1) கல்வி கற்கும் உரிமை 2) வாக்களிக்கும் உரிமை
3) வாழும் உரிமை 4) விரும்பிய இடத்தில் வாழும் உரிமை

11. நற்பிரஜை ஒருவர் விருத்தி செய்ய வேண்டிய நற்பண்புகளில் ஒன்று
1) பொறாமை 2) கோபம் 3) வன்சொல் 4) நேர்மை



kalvi.lk

12. தற்போது மாணவர்களின் கட்டாயக் கல்வி வயது எல்லை
1) 4 – 14 வயது 2) 4 – 16 வயது 3) 6 – 16 வயது 4) 6 – 14 வயது

13. சமூக மேம்பாட்டிற்கான சட்டம் சார்ந்த கடமையாக அமைவது
1) அரசிற்கு கட்டுப்படல் 2) மூத்தோரை மதித்தல்
3) சுய மரியாதை 4) பிற சமயம், இனங்களுக்கு மதிப்பளித்தல்

14. சவால்களை வெற்றி கொள்ள பின்பற்ற வேண்டிய வழிமுறைகளில் ஒன்று
1) பயம் 2) சோர்வு 3) மன உறுதி 4) புறக்கணிப்பு

15. சிறுவர்களை வேலைக்கமர்த்துவதற்கான காரணமாக அமைவது
1) பெற்றோரின் அறியாமை 2) சிறுவர் விருப்பம்
3) சிறுவரின் கல்வி அறிவு 4) சிறுவரின் திறன்

16. சமூக பிரஜை என்ற வகையில் எமக்கு இருக்க வேண்டிய பொறுப்புக்களில் ஒன்று
1) சட்டத்தை அவமதித்தல் 2) பொது சொத்துக்களை பாதுகாத்தல்
3) பிறரின் சமயங்களை அவமதித்தல் 4) பிறர் கருத்துக்களை மதிக்காமை

17. எமது வாழ்க்கை முன்னேற்றத்திற்கு அவசியமானவை அல்லாதது
1) குடும்பம் 2) பாடசாலை 3) சமய நிறுவனங்கள் 4) திரைப்படங்கள்

18. சிறந்த ஊடகங்களினால் கிடைக்கும் பயன்களில் ஒன்று
1) மதுபாவனை 2) நோய்த்தொற்று 3) ஆளுமை விருத்தி 4) மரணம்

19. விளையாட்டில் ஈடுபடுவதனால் கிடைக்கும் நன்மைகளில் ஒன்று
1) போட்டி மனப்பான்மை 2) கட்டளைகளை பின்பற்றல்
3) தோல்வியை ஏற்காத பண்பு 4) பின்வாங்குதல்

20. குடும்பமாக வாழ்வதனால் பிள்ளைகள் அனுபவிக்கும் நன்மைகளில் ஒன்று
1) அன்பு, அரவணைப்பு கிடைத்தல் 2) தனிமைப்படுத்தப்படல்
3) முரண்பாடுகள் உருவாகுதல் 4) மனவிரக்தி ஏற்படல்

(20X2=40புள்ளிகள்)



kalvi.lk

## பகுதி II

❖ முதலாம் வினாவுக்கும், ஏனைய நான்கு வினாக்களிற்கும் விடை தருக.

01.

1. குடியியற்கல்வி பாடத்தில் நீங்கள் இரண்டாம் தவணைக்காக செய்த கணிப்பீடுகள் இரண்டு தருக.
2. இக் கணிப்பீடுகளை மேற்கொண்ட பாட அலகுகள் எவை?
3. கணிப்பீட்டிற்கான மேலதிக தகவல்களைப் பெற்ற முறை யாது?
4. ஆசிரியர் கணிப்பீடு தொடர்பாக உமக்கு வழங்கிய அறிவுறுத்தல்கள் இரண்டு தருக?

(4X3=12புள்ளிகள்)

02.

1. சமூகத்தில் காணப்படும் குடும்பங்களின் வகைகள் இரண்டு தருக. (2 புள்ளிகள்)
2. குடும்பமொன்றில் காணப்படும் பொதுவான சிறப்பம்சங்கள் மூன்று தருக. (3 புள்ளிகள்)
3. சமூகத்தின் நன்மைக்கு காரணமாக அமையும் சமூக நிறுவனங்கள் மூன்று தருக. (3 புள்ளிகள்)
4. விளையாட்டில் ஈடுபடும் ஒருவரிடம் விருத்தி அடைந்திருக்கும் பண்புகள் நான்கு தருக. (4 புள்ளிகள்)

03.

1. ஓய்வு நேரத்தை பயனுள்ளதாக்கும் வழிகள் இரண்டு தருக. (2 புள்ளிகள்)
2. மனிதரிடத்தில் காணப்பட கூடிய மனவெழுச்சிகள் மூன்று தருக. (3 புள்ளிகள்)
3. பொருத்தமற்ற மனவெழுச்சியை கட்டுப்படுத்தி கொள்ள பின்பற்ற வேண்டிய செயல்கள் மூன்று தருக. (3 புள்ளிகள்)
4. நற்பிரஜை ஒருவரிடம் காணப்பட கூடிய நல்ல குணங்கள் நான்கு தருக. (4 புள்ளிகள்)

04.

1. குடும்பத்தின் மூலம் உமக்கு கிடைக்கும் உரிமைகள் இரண்டினை குறிப்பிடுக. (2 புள்ளிகள்)
2. அயலவர்களுடன் நட்புறவை பேணும் சந்தர்ப்பங்கள் மூன்று தருக. (3 புள்ளிகள்)
3. தொழில் ஒன்றில் போதியளவு வருமானம் கிடைப்பதனால் பெற்றுக்கொள்ளக் கூடிய பயன்கள் மூன்று தருக. (3 புள்ளிகள்)
4. குடும்பத்தில் நடைமுறையில் உள்ள பழக்கவழக்கங்கள் இரண்டும் சம்பிரதாயங்கள் இரண்டும் தருக. (4 புள்ளிகள்)

05.

1. அயலவரிடையேயான ஆளிடை தொடர்பில் குறைபாடு ஏற்படின் தோன்றும் பிரச்சனைகள் இரண்டு தருக. (2 புள்ளிகள்)
2. சமய அமைப்புக்களினால் சமூகத்திற்கு ஆற்றப்படும் பணிகள் மூன்று தருக. (3 புள்ளிகள்)
3. அன்றாட வாழ்வில் எதிர்கொள்ளும் சவால்கள் மூன்று தருக. (3 புள்ளிகள்)
4. சவால்களை வெற்றி கொள்ளும் வழிமுறைகள் நான்கு தருக. (4 புள்ளிகள்)

06.

1. சிவில் உரிமைகள் இரண்டு தருக. (2 புள்ளிகள்)
2. தொழிலாளர் சட்டங்கள் முறையாக பின்பற்றப்படாமையால் ஏற்படும் பாதிப்புக்கள் மூன்று தருக. (3 புள்ளிகள்)
3. சிறுவர்கள் வேலைக்கமர்த்தப்படுவதால் ஏற்படும் பாதிப்புக்கள் மூன்று தருக. (3 புள்ளிகள்)
4. கடமைகள், பொறுப்புக்களை சரியாக நிறைவேற்றுகையில் சமூகத்தில் உண்டாகும் நன்மைகள் நான்கு தருக. (4 புள்ளிகள்)



kalvi.lk

Education கல்வி අධ්‍යාපන

kalvi.lk

ONLINE CLASSES - 2025

*May*

# NEW ADMISSIONS

## 2ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் O/L வரை**

**அனைத்து பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ் ...**



இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் ZOOM APP மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.



**JOIN NOW**

WWW.KALVI.LK

**075 287 1457**